1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

100—

Establishment of Canning Industry for export of Sardines

***Q. No. 22875— Dr. Beatrix D'Souza:**

Will the Hon. the Minister for Backward Classes and Fisheries be pleased to state—

whether there is a proposal with the Government to start to Canning factory to export Sardines?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

Dr. Beatrix D' Souza: Hon. Speaker, sir, there is every indication that the food-processing sector will grow in India, following the country's major economic reforms. It is so, not only in foreign investment, but there is a major market in countries like Australia and New Zealand for canned sardines, especially in the fast-foods industry. Therefore, if the Government feels that the canning of sardines is not a viable proposition, could the Department of fisheries make available the necessary expertise to the private entrepreneurs in Tamil Nadu?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சார்டைஸ்' எனப்படும் 'சூறை' என்ற வகை மீன்களை டப்பாக்களில் அடைத்து விற்பதற்காக 1966-ஆம் ஆண்டே 2 டன் கொண்ட ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட சூழ்நிலையில், அந்தத் தொழிற்சாலை 'வயபிலிட்டி' இல்லாத காரணத்தால் அன்றைக்கு மூடி, தனியார் ஒருவருக்கு குத்தகை அடிப்படையிலே விட்டும்கூட, அந்தத் தொழிற்சாலையை நடத்த முடியாத சூழ்நிலையில், தற்போது அது மீன் வளக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டது. இந்தச் சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, எதிர்காலத்திலே பதப்படுத்துகின்ற தொழிற்சாலை குறிப்பாக மீன்கள் எல்லாம் அழியக்கூடிய அளவிற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தால், —'பெரிஷபிள் கூட்ஸ்' என்று சொல்லக்கூடிய வகையில் அந்த மீன்கள் அழியக்கூடிய அளவிற்கு வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால்,—அரசே அதைச் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

[1994 நவம்பர் 10

ஆனால் தனியார் முன்வந்தால், இம்மாதிரியான மெரைன் பேஸ்டு மீன்கள் மட்டுமல்லாமல், 'மெரைன் பேஸ்டு' இன்டஸ்ட்ரீஸ்' தொடங்குவதற்கு அவர்கள் முன்வந்தால், மீன்வளத்துறையிலே, வல்லுநர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய அந்தக் கருத்தை, டெக்னாலஜி என்று சொல்லக்கூடிய தொழில் நுட்பம், தேவையான அளவிற்கு திட்ட அறிக்கை, புராஜக்ட் ரிப்போர்ட்ஸ்தயாரித்து, வேண்டிய உதவிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

குறுகிய கால வினா எண் 1

திருவெறும்பூர் அரசு கலைக்கல்லூரியை மகளிர் கல்லூரியாக மாற்றுதல்

44707— திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் அரசு கலைக்கல்லூரியை வரும் கல்வியாண்டு முதல் "மகளிர் கல்லூரி"-ஆக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனது நன்றியை அதற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவெறும்பூர் பகுதியில், 'பெல்', துப்பாக்கித் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகள் உள்ளன. அங்கு பணிபுரியும் 20 ஆயிரம் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் பயன்பெறக்கூடிய வகையில் திருச்சி மாவட்டத்தில் அரசினர் மகளிர் கல்லூரி இல்லை என்ற குறையைப் போக்கிட தமிழகத்தின் யுகப் பேரெளியான, இதய தெய்வம் டாகடர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்கால ஆட்சியில், வருகிற ஆண்டில் திருவெறும்பூர் கலைக் கல்லூரியை மகளிர் கல்லூரியாக மாற்றிட அர்சு அனுமதி தருமா என அறிய விரும்புகிறேன்.